விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 15 செவ்வாய் 31.08.2021 மலர் - 2, இதழ் - 147

# மதுரை ஆதீனம் கேள்வி



விஜயபாரதம்

மதுரை ஆதீனத்தின் 293வது ஆதீனமாக ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகசுவாமிகள்கடந்த ஆகஸ்ட் 23ல் முடிசூட்டப்பட்டார். செய்தியாளர்களை சந்தித்த அவர், 'மக்களோடு மக்களாக எப்போதும் தொடர்பில் இருப்பேன். அரசே ஆலயத்தை விட்டு வெளியேறு என்ற போராட்டத்திற்காகக் கன்னியாகுமரி முதல் சென்னை வரை நடைப் பயணம் மேற்கொண்டவன் நான். எல்லா அரசியல் கட்சிகளுடனும் தொடர்புடையவன். மக்கள் மத்தியில் தேசப்பற்று குறைந்து வருவதால் தேவார பாடசாலை மூலம் தேசப்பற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. எந்நேரமும் மடத்திற்கு வந்தால் அன்னதானம் உண்டு. மதுரை ஆதீன மடத்தின் சார்பில், சிறந்த ஓதுவாருக்கு ஞானசம்பந்தர் விருது, சைவ சமயத்தில் சிறப்பாக செயல்படும் பெண்மணிக்கு மங்கையர்க்கரசி விருது. பாண்டித்துரை தேவர் பெயரில் ஒரு விருது, தியாகத்திற்காக வ.உ.சி விருது, மதுரை ஆதீனத்திடம் தீட்சை வாங்கிய வள்ளலார் பெயரில் ஒரு விருது என ஐந்து விருதுகள் வழங்க உள்ளோம்' என தெரிவித்தார். மேலும், 'சமூக நல்லிணக்க மாநாடுகளுக்கு அழைத்தால் செல்வேன் நான் குர்ஆனையும், பைபிளையும் ஏற்றுக்கொள்கிறேன். கிறிஸ்துவர்களும், முஸ்லிம்களும் ஹிந்து சமயத்தில் தரப்படும் விபூதியைப் பூசிக்கொள்வார்களா, ஹிந்து சமயத்தை முஸ்லிம்களும், கிறிஸ்துவர்களும் ஏற்றுக்கொள்வார்களா?' என்று கேள்வி எழுப்பினார்.



விஜயபாரதம்

# சேவையே வேள்வி

சேவாபாரதி தமிழ்நாடு சார்பில் கடந்த 29.8.2021ல் நடைபெற்ற பெரியோர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் 'சேவையே வேள்வி' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. கொரோனா முதல் அலை மற்றும் இரண்டாம் அலை காலக்கட்டத்தில் சேவாபாரதி தமிழ்நாடு செய்த சேவைப் பணிகள் சம்பந்தமான விவரங்கள் இப்புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. புத்தகத்தை ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தென்பாரத பிரச்சாரகர் செந்தில்குமார் வெளியிட சேவாபாரதியின் சென்னை மாநகர பொருளாளர் சங்கர் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில், சேவாபாரதியை சேர்ந்த பல்வேறு முக்கியப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# விவசாயிகளை வஞ்சிக்கும் தி.மு.க



விஜயபாரதம்

விவசாயிகளுக்கு நன்மை செய்யும் புதிய விவசாய சட்டங்களை எதிர்ப்பதன் மூலம் முதல்வர் ஸ்டாலின் விவசாயிகளின் வளமான வாழ்வுக்கு குறுக்கே நிற்பது வேதனை அளிக்கிறது என, தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். மேலும், 'விவசாயிகுக்கு ஆண்டுக்கு 6,000 ரூபாய் கொடுத்தபோது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக மத்திய அரசு எப்படி நேரடியாக உதவலாம்? என கேட்காத தி.மு.க, தற்போது வேளாண் சட்டங்களை மட்டும் எதிர்க்கிறது. விவசாயிகள் சுதந்திரமாக, தங்கள் விளைபொருட்களை அதிக விலைக்கு விற்க வழிவகை செய்யும் சட்டத்தை தடுக்கிறது. விவசாயிகளை ஏமாற்றி, அதிக லாபம் பெறும் இடைத்தரகர்களை காப்பாற்றவே தி.மு.க அரசு செயல்படுகிறது. பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில், இடைத்தரகர்கள் தான் போராடுகின்றனர். விவசாயிகள் விடுதலை கிடைத்த மகிழ்ச்சியை கொண்டாடுகின்றனர். இது தெரிந்தும், எதிர்க்கட்சி என்பதால் தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் எதிர்க்கின்றன. கடந்த 2016ல் தி.மு.க தேர்தல் அறிக்கையில் சொன்ன 'வேளாண் பொருள் விற்பனைக்கு புதிய கொள்கை, இடைத்தரர்கள் நீக்க நடவடிக்கை, தமிழக விளைபொருளை சர்வதேச சந்தையில் விற்க ஒரு அமைப்பு, குறைந்தபட்ச விலைக்கு பதிலாக அதிகபட்ச விலை கிடைக்க நடவடிக்கை போன்ற விஷயங்கள்தான் புதிய வேளாண் சட்டங்களில் கூறப்பட்டுள்ளது. இதற்கு தி.மு.க மகிழ்ச்சி அடையாமல் பதற்றமடைவது ஏன்? என அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

# தயாராகும் இந்து முன்னணி



விஜயபாரதம்

அடுத்த மாதம் கொண்டாடப்பட உள்ள விநாயக சதுர்த்திக்கு இந்து முன்னணியினர் ஆர்வமுடன் தயாராகி வருகின்றனர். தமிழகத்தில் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு இந்து முன்னணி சார்பில் பல்வேறு இடங்களில் பொதுவெளியில் குறிப்பிட்ட இடங்களில் ஆண்டு தோறும் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்படும். அந்த இடங்களில் இந்த ஆண்டு மீண்டும் விநாயகர் சிலைகளை வைக்க வேண்டிக்கொண்டு இந்து முன்னணியினர் பந்தக்கால் நட்டு, மாலைப் போட்டு காப்புக் கட்டி வருகின்றனர்.

# காஷ்மீரில் ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி

காஷ்மீரின் வடக்குப் பகுதியில் உள்ள ஹண்ட்வாராவில் ஏறத்தாழ 30 வருடங்களுக்குப் பிறகு ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழாவை மக்கள் பெரும் உற்சாகத்துடன் கொண்டாடினர். அதையொட்டி நகரில் ரத யாத்திரையும் நடைபெற்றது. பெருமளவில் மக்கள் இதில் பங்கேற்றனர்.

விஜயபாரதம்

# ஆபத்தை விளைவிக்கும் ஆன்லைன் நிறுவனங்கள்



விஜயபாரதம்

குரோபர்ஸ் என்ற நிறுவனம் ஆன்லைன் வழியாக மளிகைப் பொருட்களின் ஆர்டர்கள் பெற்று மக்களின் வீடு தேடி சென்று மளிகை பொருட்களை டெலிவரி செய்து வருகிறது. இந்நிறுவனத் தலைவர் அல்பிந்தர் தின்ட்சா, ஒரு சமூக வலைத்தளப் பதிவில், '10 நிமிடங்களில் பொருட்களை வழங்க வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்' என பதிவிட்டிருந்தார். இதற்கு சமூக வலைதளங்களில் கடும் கண்டனம் எழுந்துள்ளது.

ஆன்லைன் நிறுவனங்களான ஸ்விக்கி, ஸொமாட்டோ, குரோபர்ஸ், பிட்சா டெலிவரி செய்யும் நிறுவனங்கள் எல்லாம் இது போன்ற வாக்குறுதிகள் அளித்து, பொருட்களை எடுத்து வந்து தரும் ஊழியர்களின் உயிருக்கும் பொதுமக்களின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கின்றன. விரைவாக டெலிவரி செய்ய வேண்டும் என்பதற்காக இந்நிறுவன ஊழியர்களில் பெரும்பாலானோர் போக்குவரத்து விதிகளை மதிப்பதில்லை. பெருகிவரும் போக்குவரத்து நெரிசல், குறுகிய சாலைகள், மக்களின் பாதுகாப்பு, போக்குவரத்து விதிகள் போன்றவற்றை மனதில் நிறுத்தி இந்நிறுவனங்களும், வாடிக்கையாளர்களும், ஊழியர்களும் செயல்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. மத்திய மாநில அரசுகளும் இந்த விவகாரத்தில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

# சென்னையில் சதி; பயங்கரவாதி கைது




விஜயபாரதம்

சென்னையில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள், சில நாட்களுக்கு முன் 2 வங்கதேசத்தவர்களை கைது செய்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில், மேற்கு வங்கத்தில் வடக்கு 24 பர்கானா மாவட்டத்தில் ஜஹாங்கிர் பிஸ்வாஸ் என்ற வங்கதேசத்தைச் சேர்ந்த பயங்கரவாதியை எல்லைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர். ஜஹாங்கிர், 8 வருடத்துக்கு முன்பே பாரதம் வந்துள்ளான். சென்னையில் தங்கி இருந்து கட்டுமானத்துறை கான்ட்ராக்டரிடம் வேலை பார்த்துள்ளான். ஹிஜ்ப் உத் தாஹிர் என்ற பயங்கரவாத அமைப்பின் உதவியுடன் சென்னையில் உள்ள கோவில்களில் குண்டு வைக்க இவர்கள் திட்டமிட்டது தெரிய வந்தது. காவல்துறையினர் அவனை தேடுவதை அறிந்ததும் சென்னையில் இருந்து தப்பி வங்கதேசத்திற்கு மீண்டும் திரும்பி செல்லவும் நிலைமை சீரான உடன் மீண்டும் திரும்பி வரவும் அவன் திட்டமிட்டிருந்தான். எல்லை பாதுகாப்பு படையினர் சரியான சமயத்தில் எச்சரிக்கப்பட்டதால் அவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

# கோவேக்ஸின் புதிய ஆலை



விஜயபாரதம்

மத்திய சுகாதாரம், குடும்ப நலன், இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, ஆகஸ்ட் 29ல் குஜராத் மாநிலம், அன்கலேஷ்வரில், பாரத் பயோடெக் நிறுவனம் புதிதாக துவங்கியுள்ள சிரோன் பெஹ்ரிங் தடுப்பூசி மருந்து தயாரிப்பு ஆலையில் தயாரிக்கப்பட்ட கோவாக்ஸின் முதல் வணிகத் தொகுப்பை வெளியிட்டார். பாரத் பயோடெக் ஏற்கனவே ஹைதராபாத், மாலூர், பெங்களூரு, புனே உள்ளிட்ட இடங்களில் தடுப்பூசி உற்பத்தியை செய்து வருகிறது. பிரதமரின் தொலைநோக்கு பார்வை, சீரிய முயற்சிகளின் காரணமாக பாரதம் தனது முதல் உள்நாட்டு தடுப்பூசியை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது. உலகளாவிய அளவில் பாரதம் மிகப்பெரிய தடுப்பூசி திட்டங்களில் ஒன்றை செயல்படுத்தி வருகிறது. பாரத் பயோடெக், ஜைடஸ் காடிலா ஆகிய இரண்டு நிறுவனங்களின் தடுப்பூசிகளின் ஆராய்ச்சி, உற்பத்தி பாரதத்திலேயே முழுமையாக செயல்வடிவம் பெற்றது நமக்கெல்லாம் பெருமை அளிக்கிறது என அமைச்சர் குறிப்பிட்டார். தனது 100 கோடி தடுப்பூசி மருந்துகள் தயாரிப்பு என்ற இலக்கை எட்டும் விதத்தில் பாரத் பயோடெக் செயல்படுவதாக பாரத் பயோடெக் தலைவர் கிருஷ்ணா எல்லா தெரிவித்தார்.

# உஜ்ஜயினியில் கிருஷ்ண ஜன்மாஷ்டமி

உஜ்ஜைன்நகரில்உள்ளபாரதமாதாமந்திரில்ஆண்டுதோறும் ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி அன்று ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஸ்வயம்சேவகர்களின் கோஷ் இசை நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அன்றைய தினம் கோஷில் புல்லாங்குழல் (வம்சி) பயிற்சி பெற்றுள்ள ஸ்வயம்சேவகர்கள் அடங்கியக் குழு இந்நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. இவ்வருடம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அகில பாரத சஹ ஷாரீரிக் ப்ரமுக் ஜெகதீஷ் பிரசாத் பங்கேற்று வழி நடத்தினார்.

விஜயபாரதம்



# முஸ்லிம் மதமாற்ற வளையம்



விஜயபாரதம்

ஹரியானாவின் நுஹ் நகரில் வசிக்கும் மனோஜ் குமார் என்பவரை நிலம், சொத்து, பணம் தருவதாகவும் திருமணம் செய்து வைப்பதாகவும் கூறி அவரை முஸ்லிமாக மதம் மாற வைத்தனர் அபு பக்கர், மாஸ்டர் சொரப், மௌலானா தில்ஷாத், முபின் உள்ளிட்டோர். முதலில் அவருக்கு சிறிது பணம் கொடுக்கப்பட்டது. எனினும், சில நாட்களுக்குப் அந்த பின்னர் மதமாற்ற கும்பல் மேவாட் பகுதியில் பணம் சேகரிக்கவும் மாட்டிறைச்சி சாப்பிடவும் அவரை கட்டாயப்படுத்தினர். அவர்களிடமிருந்து தப்பிக்க நினைத்தால் கொலை செய்துவிடுவோம் எனவும் மிரட்டினர். அவர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதனையடுத்து ஒரு மௌலானா உட்பட மூன்று முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் தவாத் இ இஸ்லாமி மற்றும் உலகளாவிய அமைதி மையம் ஆகியவை இந்த மதமாற்ற மோசடிக்கு பின்னால் உள்ள என்.ஜி.ஓக்கள் என்பது தெரியவந்துள்ளது. தவாத் இ இஸ்லாமி அமைப்பு பயங்கரவாத தொடர்புகளைக் கொண்டது. பாரதத்தில் உள்ள முஸ்லீம்களும் இந்த அமைப்பை எதிர்க்கின்றனர். பாகிஸ்தானை தளமாகக் கொண்டு செயல்படும் இவர்கள், கடந்த 2018, 2019ம் ஆண்டுகளில் தெலுங்கானா, கர்நாடகாவில் மதக் கூட்டங்களை நடத்த முயன்றனர், இதனை முஸ்லிம்களே கடுமையாக எதிர்த்தனர். தவாத் இ இஸ்லாமி அமைப்பு பொது அமைதியை சீர்குலைப்பது, சன்னி, ஷியா பிரிவினரிடையே சண்டையை ஏற்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மத்திய புலனாய்வு அமைப்புகள் இதனை தற்போது கையில் எடுத்துள்ளன. இந்த அமைப்பின் நிதி ஆதாரங்கள், பாரதத்தில் அதன் நெட்வொர்க் உள்ளிட்டவை குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

# பிரக்ருதி வந்தனா

பரியவரன் சம்ரக்ஷன் தமிழ்நாடு, ஆரோக்கியபாரதி தமிழ்நாடு ஆகிய அமைப்புகள் இணைந்து திருப்போரூர் மாவட்டத்தில் உள்ள காட்டூர் கிராமத்தில் 305 தன்னார்வலர்களுடன் சுமார் 60 ஏக்கர் நிலப்பரப்பில் 650 மரக்கன்றுகளை நட்டனர். இதில், பரியவரன் சம்ரக்ஷனின் மாநில செயலாளர் ராஜேஷ் விவேகானந்தன், ஆரோக்கியபாரதி மாநிலத் தலைவர் ராஜேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



விஜயபாரதம்

# தாயகம் திரும்பியவர் நம்பத்தகுந்தவரா?



விஜயபாரதம்

மேற்கு வங்கத்தின் வடக்கு டம் டம் பகுதியில் நிம்தாவில் வசிக்கும் தமல் பட்டாச்சார்யா, ஆப்கானிஸ்தானில் காபூலில் உள்ள ராணுவ பள்ளியான கர்தான் சர்வதேச பள்ளியில் இயற்பியல், வேதியியல் ஆசிரியராக பணியாற்றி வந்தார். ஆப்கனை தலிபான்கள் கைப்பற்றியதை அடுத்து அவரை மத்திய அரசு பத்திரமாக தாயகம் மீட்டு வந்தது. ஆனால், நாடு திரும்பிய பிறகு அவர் நடவடிக்கைகளில் மாற்றம் தெரிந்தது. அவரது சமூக வலைத்தளப் பதிவில் அவர், தலிபான்கள் நம்பத்தகுந்தவர்கள், அவர்கள் என்னுடன் தோழமையாக பழகினர், கிரிக்கெட் விளையாடினர், உணவு கொடுத்து பார்த்துக்கொண்டனர் என தொடர்ந்து தலிபான்களை புகழ்ந்து வந்தார். அவர்களுடன் அவர் சகஜமாக இருக்கும் புகைப்படங்களும் வெளியாகின. இதனையடுத்து, 'இந்த நெருக்கடியான நேரத்தில், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட முழு உலகமும் போராடி வருகிறது. இந்நிலையில் தமல் பட்டாச்சார்யாவின் செயல்பாடுகள் சந்தேகத்தை எழுப்புகிறது, அவரை அரசு விசாரிக்க வேண்டும், இது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், அவர் பயங்கரவாதியாகக்கூட இருக்க வாய்ப்புள்ளது என சூரஜ் குமார் சிங் என்பவர் ஆதாரங்களுடன் மேற்குவங்க அரசின் உள்துறைக்கு கடிதம் எழுதியுள்ளார். இதனை அம்மாநில உள்துறை அமைச்சகம் ஏற்றுக்கொண்டு விசாரிப்பதாக தெரிவித்துள்ளது.

# மாட்டும் மற்றொரு மகா., அமைச்சர்



விஜயபாரதம்

மகாராஷ்டிராவில் உள்ள தொழில் அதிபர்கள், காண்டிராக்டர்கள், பார்கள் என பல இடங்களில் இருந்து மாதம்தோறும் 100 கோடி மாமுல் வசூலித்துத்தர காவல்துறை கமிஷனரிடம், முன்னாள் உள்துறை அமைச்சர் அனில் தேஷ்முக் கேட்ட விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனால் அவர் பதவியை ராஜினாமா செய்தார். இதில், காவல்துறை கமிஷனர் பரம் பிர் சிங், சச்சின் வாசே உள்ளிட்டோரும் சிக்கினர். இவ்வழக்கை தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏவும் அமலாக்கத்துறையும் விசாரித்து வருகிறது. இந்நிலையில், மகாராஷ்டிரா போக்குவரத்து அமைச்சர் அனில் பரப்பின் பெயரும் இதில் இடம் பெற்றுள்ளதால், அவரை இன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது. இவர் மீது ஏற்கனவே, மும்பை போக்குவரத்து நிறுவனமான பி.எம்.சியின் ஒப்பந்ததாரர்களிடம் பணம் வசூலித்தல், ஆர்.டி.ஓ இடமாற்றங்கள், எஸ்.டி டிக்கெட் கோத்தலா, சட்டவிரோத டபோலி ரிசார்ட் உள்ளிட்ட புகார்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சஷீரில் இணைய முடக்கம்

ஆப்கன் தலைநகர் காபூல் தலிபான்களிடம் வீழ்ந்த பிறகு அதன் அதிபர் அஷ்ரப் கானி நாட்டை விட்டு தப்பிச் சென்றார். இதனையடுத்து, ஆப்கனின் அரசியலமைப்பின்படி துணை அதிபர் அம்ருல்லா சலேதான் தற்போதைய தற்காலிக அதிபர். அவர் உயிருக்கு பயந்து தலிபான்களுக்கு எதிராக ஆப்கனில் இயங்கி வரும் நார்த்தர்ன் அலையன்ஸ் அமைப்பின் தலைமையிடமான பஞ்சஷீர் பகுதியில் தங்கியுள்ளார். அங்கிருந்து அவர் வெளியிடும் செய்திகளை முடக்கவும், அப்பகுதியை உலகத்தின் பார்வையில் இருந்து மறைத்து அதனையும் முழுவதுமாக கைப்பற்றவும் தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர். இதன் முதல்கட்டமாக அங்கு இணைய வசதியை முற்றிலுமாக முடக்கியுள்ளனர் தலிபான்கள். துணை அதிபர் அம்ருல்லா சலே, பல காலமாக ஐ.எஸ்.ஐ.எஸ், ஹக்கானி அமைப்புகளுடனான தலிபான்களின் தொடர்பு, அவர்களுக்கு பாகிஸ்தானின் உதவி போன்றவற்றை எதிர்த்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்

# பொய் கூறும் காங்கிரஸ்




விஜயபாரதம்

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் பொய்யான, தவறான செய்திகளையும் வெளியிட்டு மக்களை திசைத்திருப்ப என்றுமே தயங்கியதில்லை என்பதற்கு அக்காலம் தொட்டு பல்வேறு உதாரணங்கள் உள்ளன. சமீபத்தில்கூட ராகுல் காந்தி, டெல்லியில் பாலியல் பலாத்காரத்தால் உயிரிழந்த 9 வயது குழந்தையின் பெற்றோர் புகைப்படத்தை போக்சோ சட்டத்தை மீறி சமூக வலைத்தளத்தில் வெளியிட்டார். அது குறித்து கேட்டதற்கு, அவர்களின் சம்மதத்துடன் வெளியிட்டதாக பொய் கூறினார் ராகுல். மற்றொரு நிகழ்வாக, சமீபத்தில், ஹரியானாவில் காவலர்களுக்கும் விவசாய போராட்டத்தினருக்கும் இடையே நடைபெற்ற தள்ளுமுள்ளுவில் காவலர்கள் தாக்கியதாக ஒரு விவசாயியின் தையல் போடப்பட்ட உடைந்த மண்டையின் புகைப்படத்தை டுவிட்டரில் வெளியிட்டு அரசியல் செய்தது காங்கிரஸ். ஆனால் அது உண்மையில் சில காலம் முன்பு முஸ்லிம் குண்டர்களால் தாக்கட்டு காயமடைந்த பசுப்பாதுகாப்பு அமைப்பை சேர்ந்த சோனு என்பவரின் புகைப்படம் என்பது நிரூபிக்கப்பட்டது. தங்களது குட்டு வெளியானதை அடுத்து டுவிட்டர் பதிவை அவசரமாக நீக்கியது காங்கிரஸ் கட்சி. எனினும் அசாம் காங்கிரசின் டுவிட்டர் பக்கம், ராகுல் காந்தியின் நெருங்கிய உதவியாளர் இம்ரான் பிரதாப்கரி உள்ளிட்டோர் அந்த போலி படத்தை நீக்காமல் பகிர்ந்து வருகின்றனர்.

## அய்யா வைகுண்டசாமி திருவிழா



விஜயபாரதம்

சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமைப்பதி ஆவணி திருவிழா கடந்த கடந்த 20ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. கொரோனா பரவல் காரணமாக கட்டுப்பாடுகளுடன் விழா நடைபெற்று வருகிறது. நேற்று 11ம் நாள் விழாவின்போது அய்யா பல்லக்கு வாகனத்திலிருந்து பஞ்சவர்ண தேருக்கு எழுந்தருளினார். ஐயாவுக்கு பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுருள் வைத்து வழிபட்டனர்.

## தலிபான்களின் கமாண்டோ படை



விஜயபாரதம்

தலிபன்கள் ஆப்கானிஸ்தானை விழுங்கிய பிறகு அதன் தலைநகர் காபூலின் பாதுகாப்பை தாலிபன்களின் 'பத்ரி 313' எனப்படும் கமாண்டோ பிரிவு தான் கவனித்துகொள்கின்றன. தலிபன்கள் என்றாலே நமது நினைவுக்கு வருவது கையில் ஏகே 47 துப்பாக்கியுடன் நீண்ட குர்தா உடையுடன் நீண்ட தாடி உடையர்கள் தான். ஆனால் இந்த பத்ரி 313 படைப் பிரிவில் உள்ள தாலிபன்களை பார்த்தால் நம் எண்ணத்தை மாற்றிக்கொள்வோம்.

பத்ரி 313ல் உள்ள தாலிபன்கள், மேற்கத்திய நாடுகளின் உள்ள கமாண்டோ படைப்பிரிவினைப் போலவே நவீன ராணுவ பாதுகாப்பு உடைகள், கை, கால் பாதுகாப்பு பேடுகள், டாக்டிகல் ரேடியோ, அதி நவீன துப்பாக்கிகள், நவீன ஆயுதங்கள், தலைக்கவசங்கள் தரித்து நவீன ராணுவ வாகனங்களில் காபூலை சுற்றி வருகின்றனர். இரவு நேரப் பார்க்கும் கருவிகளும் வைத்திருப்பதால் இரவில் சண்டையிடும் திறனையும் இவர்கள் பெற்றிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவர்களுக்கு எங்கிருந்து இவை அனைத்தும் கிடைத்தன என்பதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. அமெரிக்கா, ஆப்கன் படைகளுக்கு வழங்கிய அனைத்து நவீன ஆயுதங்களும் தற்போது இவர்கள் கையில்தானே உள்ளது. ஏற்கனவே, 28 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான ஆயுதங்களை அமெரிக்கா ஆப்கன் படைகளுக்கு வழங்கியிருக்கிறது. அது அனைத்தும் இப்போது இவர்கள் கையில். போதாத குறைக்கு 80 பில்லியன் ராணுவத் தளவாடங்களை ஆப்கனிலேயே விட்டுவிட்டு அவசர அவசரமாக ஓட்டம் பிடித்து வருகிறது அமெரிக்கா.

மற்ற தாலிபன் பயங்கரவாதிகளை விட இவர்கள் அதிக சண்டையிடும் திறன் படைத்தவர்களாக உள்ளனர். ஹக்கானி பயங்கரவாத இயக்கத்திடம் இவர்கள் பயற்சி பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இரு இயக்கத்திற்குமான உறவு சமீபகாலத்தில் அதிகரித்துள்ளதாகவும் தலிபன்கள் கட்டமைக்க உள்ள அரசாங்கத்தில் ஹக்கானி இயக்கத்தினரும் பங்கெடுக்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்த பத்ரி 313 படையால் மற்ற நாட்டு கமாண்டோ பிரிவினை எதிர்த்து சரிசமமாக சண்டையிட முடியுமா என்பது சந்தேகமே என்றாலும் தாலிபன்கள் ஒரு நவீன இராணுவத்தை கட்டமைத்து அதன் திறனை அதிகரிக்க உள்ளனர் என்பதை மட்டும் உறுதியாகக் கூறலாம்.

# வலையில் சிக்கிய மீம்கள்






# பாலுக்கு ஏற்பட்ட வருத்தம்



விஜயபாரதம்

பாலுக்கு ஒரு பெரிய வருத்தம். பசுவின் வயிற்றில் இருந்தேன். என்னை ஒருத்தி கறந்து பாத்திரத்தில் ஊற்றினாள். அடுப்பைப் பற்றவைத்து அதில் சூடாக்கினாள். சூடு தாங்க வில்லை. துடித்துப் போனேன்.

பசுவின் வயிற்றில் பத்திரமாக இருந்த எனக்கு இப்படி ஏன் இந்த சோதனை? என்று நொந்து கொண்டேன். பொங்கிய நிலையில் என்னை அடுப்பிலிருந்து இறக்கிவைத்தாள். நேரமாக, நேரமாக நான் ஆறியதும், புளித்த மோரைக் கொண்டு வந்து என்னோடு சேர்த்தாள். இது என்னடா புது தண்டனை? என்று வருத்தப்பட்டேன்.

அதன் பிறகு யாரும் என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. திரவமாக இருந்த நான் திடமாக மாறிப்போனேன். எனக்குத் தயிர் என்று புதிதாக ஒரு பெயரை வைத்தார்கள். அத்துடன் நிறுத்தினார்களா? என்னை ஒரு பானையில் ஊற்றி, மத்து கொண்டு கடைந்தார்கள். நான் திரவமாகி மோர் என்ற பேர் பெற்றேன்.

என்னுள்ளிருந்தே ஒரு திடப்பொருளை வரவழைத்து, அதனை வெண்ணெய் என்றனர். 'பட்டர்' என்ற பெயரைக் கேட்டதும், அப்பாடா! இனியாவது என் வாழ்க்கை 'பெட்டர்' ஆகுமா? என்று ஏங்கினேன். ஆனால், அந்த வெண்ணெயை, மறுபடி அடுப்பில் வைத்து உருக்கினார்கள். எனக்கு நெய் என்று இன்னொரு புதுப் பெயரை வைத்தார்கள்.

உருக்கிய நெய்யை ஒரு ஜாடியில் ஊற்றி அந்த வீட்டில் ஜன்னலுக்குப் பக்கத்தில் வைத்தார்கள். பாலாக இருந்த நான், பட்ட கஷ்டங்களையும், இப்போதுள்ள நிலைமையையும் நினைத்தபடியே இருந்த நேரத்தில், ஜன்னலுக்கு வெளியில் இரண்டு பெண்கள் ஏதோ பேசிக்கொண்டே செல்வதை நான் கவனித்தேன்.

ஒருத்தி உங்க ஊர்ல பால் என்ன விலை? என்று கேட்டாள். அதற்கு அடுத்தவள், அரை லிட்டர் 20 ரூபா" என்றாள். உடனே முதல் பெண்மணி, ஆனா இந்த நெய் விற்கிற விலையைப் பார்த்தியா? அரை லிட்டர் 100 ரூபாயாம் என்றாள்.

ஜாடிக்குள்ளே இருந்த நான் அவர்கள் பேசியதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டேன். பாலாக இருந்தபோது என் மதிப்பு வெறும் 20 ரூபாய்தான். ஆனால், பல கஷ்டங்களை அனுபவித்து, நெய்யான பிறகு, என் மதிப்பு 100 ரூபாயாகக் கூடிவிட்டதே. இதை நினைக்கும்போது, நான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் எனக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை! என்றது அந்த நெய்.